Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 3 ஆம் நாள் முஹர்ரம் 3 16 5-64 சனிக்கிழமை இதழ் 95

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

கோடீஸ்வரன் வழக்கு

# அப்பீல் தீர்ப்பு வரை சிங்கள அமுல் நிறுத்தம்

## அட்டர்ணி ஜெனரல் ஆலோசனை; அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, வெள்ளி

**கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பை ஆட்சேபித்து செய்யப்பட்ட அப்பீல் முடிவு தெரியும் வரை உத்தியோக மொழி அமுல் சம்பந்தமாக அரசாங்கம் வேறு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கமாட்டாது. அட்டோர்ணி ஜெனரலின் ஆலோசனையின் மீது அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக அறியப்படுகிறது.**

உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறத்தவறிய அரசாங்க ஊழியர்கள் மீதுஎன்ன நடவடிக்கை எடுக்கலாமென்றும் உத்தியோக மொழி அமுலை மேலும் தீவிரப்படுத்துவதற்கு எவ்வித முயற்சிகளை மேற்கொள்ளலாமென்றும் அட்டோர்ணி ஜெனரலிடம் அரசாங்கம் ஆலோசனை கேட்டிருந்தது.

இதற்குப் பதிலளித்த அட்டோர்ணி ஜெனரல், கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பின் அப்பீல் முடிவு தெரியும்வரை தாம் இது விஷயத்தில் ஆலோசனை கூறும் நிலையில் இல்லையென்றும்தெரிவித்துள்ளார்.

இதே சமயம், சிங்களத்தில் தேர்ச்சி பெறாத காரணத்துக்காக சம்பள உயர்வும், உத்தியோக உயர்வும் நிறுத்தப்பட்டுள்ள அரசாங்க ஊழியரின் புள்ளி விபரங்களை இலாகாத் தலைவர்கள் மூலம் அரசாங்கம் திரட்டிவருகிறது.

## கிராமப்பகுதிகளில் வங்கிகள் திறக்கப்படும்

### கடன் உதவி வழங்க நிதிமந்திரியின் திட்டம்

கொழும்பு, வெள்ளி

கிராமப்புறங்களிலுள்ள உற்பத்தியாளருக்கு உதவியளிக்கு முகமாக கிராம வங்கிகளை ஆரம்பிக்க நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின திட்டமிட்டுள்ளார்.

இந்த வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் திறக்கப்படவிருக்கின்றன.

உற்பத்தியாளர், சில்லறை வியாபாரிகள், சிறு கைத்தொழிலாளர்கள் ஆகியோருக்கு அவரவர்கள் தகுதிக்கேற்ப இந்த வங்கிகள் கடன் உதவி வழங்கும். இதுபற்றிய மதிப்பீட்டை கூட்டுறவுச்சங்கம் நடத்தும். கடன் பெறுவதற்கு கூட்டுறவுச்சங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று ஆசிரியர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி

தமது 11 அம்சக் கோரிக்கையை வற்புறுத்துவதற்காக அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் உறுப்பினர்களான சுமார் 3000 ஆசிரியர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை இன்று நடத்துவர்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலிருந்து மாலை 3 மணிக்கு பதினொரு கோரிக்கைகளையும் வற்புறுத்தும் சுலோக அட்டைகளைத் தாங்கிய ஆசிரியர்களின் அணி ஒன்றுஊர்வலமாகப்புறப்பட்டு. மானிப்பாய் வீதி, ஸ்ரான்லி வீதி, மின்சாரநிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டு வீதி, இராஜேந்திர பிரசாத் வீதி வழியாக மாநகர சபை மண்டபத்தை மாலை 5 மணியளவில் வந்தடைந்ததும் பொதுக்கூட்டம் அகில இலங்கைத் தமிழாசியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா தலைமையில் ஆரம்பமாகும்.

யாழ். மாநகரசபை மேயர் திரு. த. ச. துரைராஜா தொடக்கவுரை நிகழ்த்துவார். பாராளுமன்றப் பிரதிநிதிகளான திருவாளர்கள்: மு. சிவசிதம்பரம், வி. என். நவரத்தினம், செ. இராஜதுரை, மு. பாலசுந்தரம் ஆகியோரும் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளான திருவாளர்கள்: ஏ. எல். ஆரியவன்சா, பீட்டர் டி சில்வா, அ. பொன்னம்பலம், மு. பேராயிரவர் ஆகியோருஞ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

## ரயில்பெட்டிகள் சீனவழங்கும்

கொழும்பு, வெள்ளி

மேலும் 200 வாகன்களும் ரயில் பெட்டிகளும் இலங்கை புகையிரதப்பகுதிக்கு சீனு வழங்கவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில்

## ரூ. 50,000 பெறுமதியான பொருள்கள்கைப்பற்றபபட்டன!

### கள்ளக்கடத்தல் முயற்சி என சந்தேகம்

காங்கேசன்துறை, செவ்வாய்

நெல்லியடியைச் சேர்ந்த லொறியொன்று ரூ. 50 ஆயிரம் பெறுமதியான கராம்பு' பாக்கு முதலிய பொருள்களைக் கள்ளக்கடத்தல் செய்யுமுகமாக ஏற்றிச் சென்றதாக சந்தேகத்தின் பேரில் பொலிகண்டியில் யாழ்ப்பாணம் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

லொறியையும் பொருள்களையும் பொலிசார் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

பல்கலைக்கழக

## என்ஜினியரிங் பகுதிக்கு அதிகமானோர் அனுமதிக்கப்படார்

கொழும்பு, வெள்ளி

வைத்திய, விஞ்ஞான பகுதிகளில் சேர்த்துக கொள்வதற்கு வேண்டிய தராதரத்தைப் பெறுவோர் இம்முறைகட்டாயமாக அவ்வப்பகுதிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஆனல் என்ஜினியரிங் பகுதிக்கு இம்முறையும் அதிகமானோர் எடுக்கப்படமாட்டார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

வைத்திய, பல் வைத்திய பகுதிக்கு அனுமதிக்கக் கூடிய

(6-ம் பககம் பார்க்க)

அகில இலங்கை
அரசினர் பாடசாலைத் தமிழா ஆசிரியர் சங்க

அறிவித்தல்

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் 16 - 5 - 64ல் நடாத்தும் பொதுக்கூட்டத்தல் என்னைப் பேச்சாளராகப் பங்குபற்றும்படி கௌரவ பொதுக்காரியதரிசி வேண்டிக் கொண்டதன்பேரில் சம்மதம் தெரிவித்தேன்.

ஆனல் இன்று எனக்குக் கிடைத்த அறிவித்தலில் தமிழாசிரியர் சங்கத்துடன், வடமாகாண ஆசிரியர் சங்கமும் (N. P. T. A.) சேர்ந்து கூட்டத்தை நடாத்துவதாக இருக்கின்றது.

இச்செயல் எமது சங்கத்தைப் புறக்கணித்துவிட்டதாக அமைவதாலும், பல அங்கத்தவர்களின் வேண்டுகோளின் படியும் இக்கூட்டத்தில் எவ்வகையிலும் பங்குபற்றுவதில்லையென முடிவுசெய்துள்ளேன் என்பதை எமது சங்க அங்கத்தவர்கட்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அ. பொன்னம்பலம்,
காரியதரிசி, (வட பிரதேசம்).

365

## தேசிய சுவீப் முடிவுகள்

காலி நகர மண்டபத்தில் நேற்று மாலை இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 7-வது சுவீப் முடிவுகள் இவை சபையின உத்தியோக பூர்வமான முடிவுகளுடன் உறுதிப்படுத்தபபடவேண்டியன:

முதற் பரிசு
12 D 0227 ரூ. 50,000

இரண்டாம் பரிசு
10 L 0354 ரூ. 16,000

மூன்றும் பரிசு
08 P 0279 ரூ. 6,520

தலா ரூபா 340 பெறும் டிக்கட்டுகள்:

(2-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மட வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### மணிவாக்கு

தாயையும், தந்தையையும், விருந்தினரையும், குருமார்களையும் தெய்வமாகப் போற்றி அவர்களுக்குப் பணி செய்க.

— உபதேசவாக்கியம்


ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி 3 உ (16-5-64)


## வேலையில்லாப் பிரச்னையும் ஜனநாயகக் கடமையும்

இங்கு படித்தவர்களிடையே வேலையில்லாக் கஷ்டம் நாளுக்குநாள் அதிகரித்து, அப்பிரச்னை சமாளிக்க முடியாதபடி எப்படி வளர்ந்து வருகின்றதென்பதைப் பார்க்கின்றோம். இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவுள்ளிட்டு பல நாடுகளிலும் இதே நிலைதான். இதைத் தீர்க்க உடன் தக்க ஏற்பாடுகளைச் செய்யாவிட்டால் படித்த வாலிபர்களின் மனம் கோணல் வழிகளில் சென்று நாட்டின் அமைதிக்கே பெருந்தீங்கு ஏற்படுவதாக இருக்கும்.

இலங்கை போக்குவரத்து சபை 500 கண்டக்டர்களும் 500 டிரைவர்களும் தேவை என்று விளம்பரம் செய்திருந்ததாம். இவ்வேலைகளுக்குமனுச் செய்த 25 ஆயிரத்து500 வாலிபர்களில் 18 ஆயிரம் பேர் ஜி. ஸி. ஈ. தராதரம் பெற்றவர்களென்று ஒருசெய்தி தெரிவிக்கிறது. சாதாரணமாக இவ்வேலைக்கு ஜி. ஸி. ஈ. படித்தவர்கள் முன்வருவதில்லை. இப்போது பல்லாயிரக்கணக்கான படித்த வாலிபர்கள் போட்டி போடுவதிலிருந்து இங்குவேலையில்லாக்கஷ்டம் அவர்களிடையே எவ்வளவு அதிகரித்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வேலைகளைச் செய்ய படித்த வாலிபர்கள் முன்வருவது ஒருவிதத்தில் நல்லதே, ஏனெனில் வேலையிலே உயர்வு தாழ்வென்பதில்லை. எந்தத் தொழிலும் நல்லதுதான். அவசியம் காரணமாக படித்த வாலிபர்கள் வீண் மனப்பிராந்திகள் இல்லாமல் எந்தவேலையும் செய்ய அதிகமாக முன் வருகிறார்கள். அப்படியிருந்தும் அவர்களில் பெரும்பாலோர் அவ்வித வேலையும் கிடைக்காமல் தவிக்க நேரிடுவது பெரிய கண்றாவி. இந்தப் பிரச்னை குறைவதற்கு பதில் வருடத்துக்கு வருடம் அதிகரித்துக் கொண்டே போகின்றது. சென்ற வருடம் ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம்பேர் தோற்றியுள்ளனராம். அவர்களில் 15 ஆயிரம்பேர் தராதரப்பத்திரம் பெற்றிருக்கிறார்கள். இதில் இரண்டொரு ஆயிரம் பேர் மேல்படிப்புக்குச் செல்லலாம். மற்றவர்கள் கதி என்ன? இங்கு இலவசக் கல்வியை அளிப்பதாகப் பெருமைப்படுகின்றோம். இதற்காகப் பல கோடி ரூபாய்களைச் செலவிடுகின்றோம். ஆனால் கண்டபலன் லட்சக்கணக்கான நம்வாலிபர்களை வேலையற்றோராக்கித் தவிக்கவிடுவதுதான்.

இதுபெரிய தேசியப் பிரச்னை. பலநாடுகளிலும் இப்பிரச்னை இருக்கவே செய்கின்றது. இந்த மனிதப் பிரச்னையைத் தீர்க்க பல நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும். ரஷ்யா, சீனம் போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளில்வேலையில்லா பிரச்னை இல்லையென்றும் எல்லாருக்கும் வேலைவாய்ப்புகள் கிடைப்பதாயும் சொல்லப்படுகின்றது. இது உண்மையாயின் இங்கும் கம்யூனிஸம் ஏற்பட்டால் நல்லதென்றும் படித்த வாலிபர்கள் பலரும் விரும்புவது இயற்கை. பார்லிமெண்ட் ஜனநாயக முறையிலே இந்த முக்கிய பிரச்னையைத் தீர்க்க முடியாதா?

அமெரிக்கா, பிரிட்டன் முதலிய ஜனநாயக நாடுகளிலே வேலையற்றோர் இன்ஷியூரன்ஸ் ஏற்படுத்தப்பட்டு உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. உலுப்பை போன்ற இந்த உதவிப்பணம் பெற்று ஜீவிக்கும் வேலையற்ற வாலிபர்களின் நிலை நிச்சயம் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. பயனுள்ள வேலைசெய்வதில்தான் ஒருவருக்கு உண்மை இன்பமுண்டு. உதவிப்பணம் அளிக்கும் முறை, வாலிபர்களுக்குத் திருப்தியற்றதென்பது ஒருபுறமிருக்க நாட்டின் மேலான உழைப்புச் செல்வத்தையும் இழப்பதாகவுமுள்ளது. இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வேலையற்றோருக்கு எவ்வித உதவித் திட்டமும் இல்லையாதலால் அவர்கள் தவிப்பு எவ்வளவு இருக்குமென்பதையும் பலாத்கார புரட்சிகளுக்கும் அவர்கள் தயாராக இருப்பரென்பதையும் விளக்கத் தேவையில்லை.

ஜனநாயகத்தை உலகில் பாதுகாக்க வேண்டுமென்று கூறும் அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு இதில் அதிக பொறுப்புண்டு. இராணுவ உதவிகளையோ பொருளாதார உதவிகளையோ அளிப்பதால் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியாது. இலங்கை போன்ற ஜனநாயக நாடுகளிலுள்ள வாலிபர்கள் உலகிலே வசதியுள்ள எந்த நாட்டுக்கும் தாராளமாகச் செல்லவும் தங்கள் திறமைக்கான வகையில் தொழில் செய்து பிழைக்கவும் வாய்ப்பு இருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக புதிதாக அரசியல் சுதந்திரமடைந்த இலங்கை போன்ற நாடுகளிலுள்ள படித்த வாலிபர்களுக்கு முன்னிருந்த பிரயாண வாய்ப்புகளுமில்லாததால் அவர்கள் ஒரு சிறைச்சாலையில் அடைபட்டுள்ளதுபோல் திகைத்துத் தவிக்கின்றார்கள். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் கம்யூனிஸம் பரவாமல் தடுக்க விரும்புபவர்கள் முதலில் தங்கள் குறுகிய தேசிய எண்ணங்களைவிட்டு இந்த வேலையில்லாக் கஷ்டத்துக்கு நல்ல தீர்வுகாண அதிக தாராளமனதுடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும். வியாதி புரையோடிவிட்டதால், நிலைமையை அடியோடு புனராலோசனை செய்து, தீவிர பரிகாரங்களைச் செய்தால்தான் ஜனநாயகம் பாதுகாக்கப்பட முடியும்.

# பத்திரிகைக் கார்ப்பரேஷன் நிறுவக்கூடாது

## கமிஷன் முன் திரு. விதாரண சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

"பத்திரிகைக் கார்ப்பரேஷன் ஒன்றை உருவாக்கி பத்திரிகைகளை கட்டுப்படுத்துவது பத்திரிகைகளின் வாயை அடைத்துவிடுவதாகும். எந்த விதத்திலும் பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். சுதந்திரங்களில் எல்லாவற்றிலும் பத்திரிகை சுதந்திரமே முதன்மையானதாகும்" என்று பத்திரிகைக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் பிரயாணிகள் விடுதியைச் சேர்ந்த திரு சௌரத் பி. விதாரன தெரிவித்தார்.

பத்திரிகை சம்பந்தமாக இப்பொழுதுள்ள குறைபாடுகளை நிவிர்த்தி செய்வதற்கு நிரந்தரமான பத்திரிகைக் கமிஷன் ஒன்று நிறுவப்படுவதே சிறந்த வழியாகும். இக்கமிஷனுக்கு ஒய்வு பெற்ற நீதிபதி ஒருவர் தலைமை வகிக்கவேண்டும். அத்துடன் பத்திரிகைகள் சம்பந்தமாக கவர்னர் ஜெனரலும் பார்லிமெண்டும் கேட்கும் கேள்விகளுக்கு விளக்கம் கொடுக்க கூடியதாக இருக்க வேண்டும்" எனவும் அவர் சிபார்சு செய்தார்.

பத்திரிகை ஸ்தாபன உரிமையாளர், பத்திரிகையாளர், பத்திரிகை காரியாலய நிர்வாகிகள் ஆகியோரிடையே இணைப்பும் கூட்டுறவும் இல்லாமையாலேயே வாசகர்கள் பாதிக்கப்படுகிறார்கள் எனவும் நிருபர் ஒருவர் செய்தி எத்தனையோ பேருக்கு வளைந்து கொடுக்கும் வகையில் எழுத வேண்டிய நிலை உள்ள தாலேயே செய்திகள் சில வேளைகளில் பொய்யாகி விடுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

ஒய்வு பெற்ற கத்தோலிக்க ஆசிரியரான திரு. டபிள்யு. எஸ். பெர்ணாண்டோ சாட்சியமளிக்கையில் பத்திரிகைகள் யு. என். பியை ஆதரித்ததாகவும் மற்றும் சாட்சிகளை ஆதரிக்கவில்லை என்றும் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

கத்தோலிக்க தேவாலயங்கள் முன்னேற் நடவடிக்கைகளை ஆதரிக்காது முதலாளித்துவத்தை ஆதரிக்கின்றன. இந்த கத்தோலிக்க தேவாலயங்களை பத்திரிகைகள் ஆதரிக்கின்றன. கத்தோலிக்க தேவாலயங்களை பள்ளிக்கூடங்களை அரசாங்கம் கையேற்றல், உத்தியோக மொழி ஆகியவற்றை எதிர்த்தன. கட்சி பாகுபாடில்லாமல் நாட்டின் நன்மையை வைத்து செயலாற்றகூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னர் இலங்கை பத்திரிகையாளர் சங்க பிரதிநிதிகள் சாட்சியமளித்தனர்.

'லங்காதீப' பத்திரிகை கமிஷனின் விசாரணை குறித்து கண்டனம் தெரிவிப்பதாக சங்கசார்பில் சாட்சியமளிக்கையில் திரு. ரத்தன சேனப்பிரிய சேனநாயக்கா தெரிவித்தார். சென்ற செவ்வாய்க்கிழமை கமிஷன் தலைவர் கேட்டபடி பத்திரிகை நடத்த தேவையான ஊழியர்கள் யார் யார் என்பது பற்றிய பட்டியல் ஒன்றை சங்கத்தினர் கமிஷனிடம் கையளித்தனர்.

## தேசிய சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 14 V 0608 | 17 L 0993 |
| 14 B 0140 | 08 A 0535 |
| 20 D 0152 | 11 B 0385 |
| 11 H 0193 | 02 W 0091 |
| 09 W 0110 | 13 B 0027 |
| 21 N 0871 | 19 G 0636 |
| 21 T 0911 | 14 L 0792 |
| 06 M 0224 | 19 R 0591 |
| 17 S 0581 | 14 U 0345 |
| 11 W 0669 | 01 Y 0437 |
| 02 N 0628 | 17 E 0541 |
| 21 F 0551 | 19 Y 0392 |
| 08 X 0355 | 16 R 0340 |
| 19 R 0806 | 02 X 0679 |
| 17 Z 0022 | 08 N 0251 |
| 02 S 0559 | 02 D 0279 |
| 10 Z 0436 | 20 X 0300 |
| 13 L 0360 | 11 A 0688 |
| 01 U 0251 | 05 Y 0174 |
| 09 V 0333 | 21 B 0492 |
| 20 W 0899 | 16 T 0431 |
| 19 S 0034 | 14 R 0718 |
| 08 T 0347 | 02 W 0101 |
| 16 Z 0744 | 14 T 0956 |
| 22 K 0401 | 10 V 0812 |
| 03 F 0083 | 06 S 0336 |
| 07 D 0406 | 11 N 0460 |
| 21 Y 0676 | 15 W 0055 |
| 03 S 0853 | 09 Y 0385 |
| 08 X 0280 | 13 V 0429 |
| 01 P 0090 | 06 K 0931 |
| 07 F 0694 | 10 H 0257 |
| 07 U 0018 | 15 L 0642 |
| 15 V 0118 | 18 P 0449 |
| 01 Q 0273 | 15 H 0307 |
| 19 D 0691 | 15 K 0111 |
| 13 F 0369 | 12 S 0235 |
| 21 A 0876 | 06 K 0590 |
| 04 Z 0186 | 05 Z 0759 |
| 20 M 0510 | 04 P 0985 |
| 13 T 0550 | 08 X 0911 |
| 12 M 0247 | 01 E 0154 |
| 05 R 0891 | 14 K 0250 |
| 23 H 0184 | 04 E 0840 |
| 18 A 0205 | 20 J 0415 |
| 05 R 0494 | 16 T 0318 |
| 06 F 0624 | 06 Q 0763 |
| 10 B 0189 | 02 F 0228 |
| 18 D 0594 | 15 S 0959 |
| 09 K 0791 | 08 Y 0066 |

## கண்ணகை அம்மன் உற்சவம்

மட்டக்களப்பு, வெள்ளி

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்றதும் இப்பகுதி பெரும்பாலான மக்களின் குலதெய்வமுமான "கண்ணகை அம்மன்" வருடாந்த உற்சவம் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதிலும் உள்ள சகல கிராமங்களிலுமுள்ள கண்ணகை அம்மன் ஆலயங்கள் அனைத்திலும் ஆரம்பமாகியுள்ளன. சில ஆலயங்களில் எட்டுத் தினங்களுக்கும் சில ஆலயங்களில் பத்து தினங்களுக்கும் சடங்குகள் நடைபெறும். சகல ஆலய சடங்குகளும் வைகாசிப் பூரணையன்று ஆரம்பமாகின்றன. குளித்தி வைபவத்துடன் முடிவடையும்.

"கல்யாணக்கல் வெட்டுதல்" 'குளிர்த்தி பாடுதல்' ஆகிய நிகழ்ச்சிகள் கண்ணகை அம்மன் சடங்கின் விசேட நிகழ்ச்சிகளாகும்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஞிகளிடம் கூறி, அது அமெரிக்கா ஏவிய செயற்கைக் கிரகமா என்று கேட்டதற்கு. அவர்கள் "ஓம்" என்றனர். ரஷ்யர்களைக் கேட்டால் அவர்கள் தங்களுடையதே எனலாம்!

இது எப்படியாயினும் இதைப்பற்றி நாம் அதிகம் கவலைப்படத் தேவையில்லை, அரசியல்வானிலே அமெரிக்காவும் ரஷ்யாவும் நட்புக் கிரகங்களாகிவருகின்றன அல்லவா!

* * *

புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி யறி வழிந்திட்டைம் மேலுந்தி, அலமந்த போதாக அஞ்சேலென்றருள் செய்வான் அமருங்கோயில், வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழை யென்றஞ்சி, சில மந்தியலமந்து மரமேறி முகில் பார்க்குந் திருவையாறே.

—திருஞானசம்பந்தர்

## ஐயாறன் எழுதுவது

திருக்கோணமலையிலிருந்து இரு அன்பர்கள் வந்தனர். அங்கு கப்பல் தொழிலாளருக்கு நல்ல "சான்ஸாம்". மாதமொன்றுக்கு ரூ. 300 முதல் 800 வரையிலும்கூட ஒருவர் சம்பாதிப்பதாயும் கூறினர் நம்பமுடியவில்லை.

நம்மில் பலர் படித்துவிட்டு நூறு ரூபாய் வேலைக்குத் கவியாய்த்தவிக்கிறோம். ஆனால் திருக்கோணமலை கப்பல் தொழிலாளர் நூற்றுக்கணக்கில் சம்பாதிக்க முடிவதாயின், இந்தப் படிப்பெல்லாம் எதற்கு என்று தோன்றுகிறதல்லவா?

* * *

அங்கு தொழிலாளர் சுபீட்சமாக வாழ்கிறார்களா என்று விசாரித்தேன் அப்படி இல்லையாம். சூதாட்டம், குடி என்ற இரு அரக்கர்களும் அவர்களது வருமானத்தில் பெரும்பகுதியை ஸ்வாகாசெய்துவிடுகிறார்களாம். மாதம் பிறந்து சம்பளம் வாங்கி நாலைந்து நாட்களுக்குள்ளாக, தொழிலாளர் கையில் காசு இராதென்றும், அவர்கள் கடன் வாங்கியே மாதக் கடைசிவரை ஒட்டுவதாகவும் கேட்க மிக வேதனையாக இருந்தது.

அந்த இரு அரக்கர்களையும் விரட்ட வழி ஒன்றுமில்லையா என்று கேட்டதற்கு, வாலிப இயக்கம் இவ்விஷயமாக ஓரளவு தொண்டு செய்துவருவதாகத் தெரிவித்தனர் இவ்விரு கொடிய அரக்கர்களின் பிடியில் சிக்கி இருக்கையில், வருமானம் எவ்வளவு வந்துதான் என்ன பயன்?

தொழிலாளரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதாகச் சொல்லி பல பல யூனியன்கள் போட்டாபோட்டியுடன் கிளம்பியுள்ளன. ஆனால் இந்த யூனியன் தலைவர்களில் ஒருவராவது, இவ்விரு அரக்கர்களிடமிருந்தும் தொழிலாளரைக் காக்க ஏதும் செய்கிறார்களா? தெய்வம்தான் அவர்களைக் காக்கவேண்டும்.

* * *

திருமலைத் தொழிலாளரிடையே "சாதி இரண்டொழிய வேறில்லை" என்றார் அன்பர். என்ன என்று கேட்டதில், "சீனு"வும் "தானு"வும்தானாம். இந்த வேற்றுமைகள் அதிகரித்துவருவதாயும், இதற்கு உடனடியாகத் தக்க பரிகாரம் காணவிட்டால், இது பெரிய விபரீதமாகிவிடலாமென்றும் சொன்னார்.

தொழிலாளருக்குள்ளாக வகுப்புவாதம் வளருவதாயின், அது எவ்வளவு ஆபத்து, அது தொழிலாளரின் தற்கொலையில் முடிவதுடன், சோஷலிஸமும் இங்கு தலைதூக்க முடியாதபடி செய்யும். சோஷலிஸம் பேசும் பெரிய பெரிய தலைவர்கள் இந்த ஆபத்தை உணர்ந்து உடன் அங்கு சென்று இதற்குத் தக்க பரிகாரம் செய்யாவிடில், அவர்கள் கட்டும் கோட்டையின் அஸ்திவாரமே தகர்ந்துவிடக் கூடும்.

* * *

அராலியிலிருந்து ஒரு செல்வி எழுதுவதாவது:– "சென்ற புதனன்று அதிகாலை 5 மணி இருக்கலாம். கட்டிலில் இருந்தபடி கண்விழிக்கிறேன். என் பார்வை யன்னல் ஊடாக ஆகாயத்தை நோக்குகிறது! அப்போது வடமேற்கே தோன்றிய ஒருவெள்ளி தென்கிழக்கை நோக்கி நகர்ந்துகொண்டிருந்ததை அவதானித்தேன். பின்பு எங்கள் குடும்பத்தினர் அனைவரும் அதைப் பார்த்தனர். அரை மணி நேரத்துக்கிடையில் அது கிழக்கே சென்று மேகங்களுக்கிடையே மறைந்துவிட்டது. அதுதான் ருஷ்யாவின் மே நாள் ஸ்புட்னிக்கா? என்று கேட்கிறார்.

சில நாட்களுக்குமுன் வேறொரு அன்பர் இவ்வித காட்சியைக் கண்டதாக இங்கு வந்திருந்த அமெரிக்க விஞ்ஞா

(4 ம் கலம் பார்க்க)

# "வகுப்பு ஒற்றுமைக்கு பாகிஸ்தானுடன் உடன்பாடு காணவேண்டும்"

## காங்கிரஸ் கமிட்டிக்கு பிரதமர் நேரு செய்தி

பம்பாய், மே 15

"வகுப்புக்கலவரங்கள் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் தீங்கானவை. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமுள்ள இதர பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு, வகுப்புக் கலகங்கள் இனியும் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக பாகிஸ்தானுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம்" என்று பிரதமர் நேரு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் கமிட்டி இன்று பம்பாயில் கூடுகிறது. வகுப்புக்கலகங்கள் பற்றிய பிரச்னைதான் கமிட்டி ஆராயவிருக்கும் பிரச்னைகளில் முக்கியமானதாகவிருக்கும். முன்னாள் சமஸ்தானங்களின் வாரிசு மாற்றம் ஏற்படும்பொழுது அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் வசதிகளைக் குறைக்கவேண்டுமென்ற யோசனையையும் கமிட்டி ஆராயும். புவனேஷ்வர் மகாநாட்டின் ஜனநாயக சோஷலிஸத் தீர்மானம்பற்றியும் கமிட்டி பரிசீலனை செய்யுமெனத் தெரிகிறது.

காங்கிரஸ கமிட்டிக்கு அனுப்பியுள்ள செய்தியில் பிரதமர் நேரு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற சம்பவங்களின் விளைவுதான் நமது நாட்டிலும் வகுப்புக் கலகங்கள் தோன்றியதற்குக் காரணமாயிருந்தது என்பது உண்மையே. ஆனாலும் நமது நாட்டில் தீய செயல்கள் நடைபெற நாம் இடங்கொடுக்கலாகாது. நமது இலட்சியங்கள், கொள்கைகளுககு மாறான சம்பவங்கள் நடைபெற நாம் அனுமதிக்கக் கூடாது.

சமீபத்தில் நிகழ்ந்த வகுப்புக்கலக சம்பவங்கள் எனக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுத்துள்ளது, வகுப்புக் கலகங்கள் நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும், வகுப்பு வேற்றுமையை நீக்கி, ஒற்றுமையை உருவாக்குவதற்கு பாகிஸ்தானுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம்.

விலைவாசி உயர்வு, பொருளாதார நிலை முதலிய மற்றும் பல பிரச்னைகள் உள்ளன என்றும் பிரதமர் தமது செய்தியில் குறிப்பிட்டிருப்பதுடன் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## மலேஸியாவைக் குலைக்கும் முயற்சி

ஜாகர்த்தா, மே 15

மலேஸியா சம்பந்தமாக உச்சி மகாநாடு நடைபெறும் வாய்ப்பிருப்பினும் மலேஸியாவைக் குலைக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுமென்றும் இந்தோனேஷியத்தொண்டர்கள் தொடர்ந்து அனுப்பப்படுவார்களென்றும் இந்தோனேஷிய வெளிவிவகாரமந்திரி டாக்டர் சுபந்திரியோ தெரிவித்துள்ளார்.

தொண்டர் திரட்டும்வேலை திட்டப்படி நடைபெற்றுவருவதாகவும் அவர் கூறினர்.

## பொலிஸ் பொறுப்பேற்கும்

வியன்டைன், மே 15

லாவோசின் நிர்வாகத் தலைநகரான வியன்டைனில் இராணுவத்தின் பொறுப்பை பொலிஸ் ஏற்றுக்கொள்ள விருக்கிறது. இடதுசாரி பதட் லாவோத் தலைவரும் உதவிப் பிரதமருமான சுவன்னவாங் தாங்கள் தலைநகருக்கு வரக்கூடிய சூழ்நிலை இல்லையெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரதமர் சுவன்னபூமா இந்நடவடிக்கையை எடுத்துள்ளார்.

பிரதமர் இளவரசர் சுவன்னபூமா நேற்றுத் திடீரென ஜார்ஸ் சமவெளிக்குச் புறப்பட்டுச் சென்றார்.

## சோவியத்—பாக். நட்புறவு

கராச்சி, மே 15

சோவியத்யூனியனுக்கும் பாகிஸ்தானுககுமுள்ள உறவு வருங்காலத்தில் பலமடையுமென தாம் நம்புவதாக பாகிஸ்தானிலுள்ள சோவியத் ஸ்தானிகர் தெரிவித்தார். மாஸ்கோவுக்கும் கராச்சிக்குமிடையில் ஆரம்பமான விமானச் சேவையில் சோவியத் யூனியனுக்குச் சென்று பத்திரிகையாளர், மற்றும் அதிகாரிகளுடன் சோவியத் ஸ்தானிகர் நேற்று கராச்சி திரும்பினர்.

## அமெரிக்காவில் காடு

நியூயோர்க், மே 15

அமெரிக்கா உலகத்திலேயே செல்வம்மிக்க நாடு என்றபடியால் அங்குள்ள எல்லா இடங்களும் நகரங்களாகவும் அழகு மிக்க கட்டடங்களாகவும் நிறையப் பெற்றிருக்கும் என்று பலர் எண்ணியிருந்திருப்பார்கள். ஆனல் அங்கே மூன்றிலொரு பகுதி காடுகளாக இருக்கிறது என்று சொன்னல் ஆச்சரியமாகத்தானிருக்கும்.

அமெரிக்க அரசாங்கம் அண்மையில் வெளியிட்ட அரசாங்கக்கணக்கிலிருந்து மூன்றிலொரு பகுதி காடாகவே இருக்கிறது என்று அறியக் கிடக்கிறது. என்றாலும் அவை செல்வம்தரும் காடுகளாகவே இருக்கின்றன.

# "தென்வியட்னமின் ராணுவ உதவி அதிகரிக்கவேண்டும்"

## மக்னமாரா சிபார்சு

வாஷிங்டன், மே 15

தென்வியட்நாமில் கம்யூனிஸ்டு வியட்கொங் கொரில்லாக்களின் தாக்குதலை எதிர்த்துச் சமாளிப்பதற்கு தென்வியட்நாமுக்கு இராணுவப் பொருளாதார உதவி அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் தீவிரப்படுத்தப்பட வேண்டுமென்றும் அமெரிக்க அதிபர் ஜோன்சனிடம் தாம் தெரிவித்திருப்பதாக அமெரிக்க பாதுகாப்புமந்திரி திரு. ரொபர்ட் மக்னமாரா கூறினர்.

சமீபத்தில் தென்வியட்நாமுக்கும் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் அறிந்து வந்த திரு. மக்னமாரா நேற்று அதிபர் ஜோன்சனைச் சந்தித்து தகவல் தெரிவித்தார்.

இதன்பின் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்த மக்னமாரா தென்வியட்நாமுக்கு பொருளாதார ராணுவ உதவி அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அதிபருக்குத் தாம் எடுத்துக் கூறியதாகக் கூறினர்.

தென்வியட்நாமில் நிலைமை நன்ருக இல்லையெனினும் முடிவில் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களுக்கெதிரான போராட்டம் வெற்றியளிக்குமென்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகக் கூறினர்.

## டோக்கியோவில் மிக்கோயன்

டோக்கியோ, மே 15

சோவியத் உதவிப் பிரதமர் திரு. மிக்கோயன் நேற்று டோக்கியோ வந்துசேர்ந்தார். சோவியத் பார்லிமெண்டரித் தூதுக் குழுவிற்குத் தலைமை தாங்கி வந்துள்ள திரு. மிக்கோயன் சோவியத் பிரதமரிடமிருந்து தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதமொன்றை ஜப்பான் பிரதமர் திரு. இக்கேடாவிடம் கொடுத்தார்.

நிலத்திற்கடியில் நடைபெறும் அணு ஆயுத சோதனைகளையும் தடைசெய்ய வேண்டுமெனக் கோரி சோவியத் யூனியனும் ஜப்பானும் ஒரு அறிக்கை விடவேண்டுமென திரு. குருஷ்சேவ் தமது கடிதத்தில் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

## மரண தண்டனை ஒழிப்பு இயக்கம்

சென்னை, மே 15

மரண தண்டனையை ஒழிப்பதற்கு நாடெங்கிலும் இயக்கம் நடத்துவதற்கு டாக்டர் சி. பி. ராமசாமிஐயர் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. திருமதி ருக்மணி தேவி அருண்டேல், ஜெயப்பிரகாஷ் நாராயண், ராம் மனேகர், லோகியா, மோகன் குமாரமங்கலம் ஆகியோர் உபதலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மரண தண்டனையை ஒழிக்கவேண்டுமென நாடெங்கும் பிரசாரம் செய்து அதற்கு ஆதரவு திரட்ட இக்கமிட்டி முயற்சி செய்யும்.

## பாடசாலை இடிந்து விழுந்தது

### 9 பேர் காயம்; 60 ஆடுகள் மாண்டன

முதுகுளத்தூர். மே 15

முதுகுளத்தூரிலுள்ள உயர்கர பாடசாலையொன்று இடிந்து விழுந்ததால் பாடசாலையில் ஒதுங்கிநின்ற 9 பேர் காயமுற்றனர். 60 ஆடுகள் ஸ்தலத்திலேயே மாண்டன.

லேசான மழைக்குப் பின்னர் சற்றுபலத்த காற்று அடித்தபோது பாடசாலையின் ஓடுகள் உள்ள பகுதி இடிந்து விழுந்தது.

காயமடைந்தவர்களில் 8பேர் ஆடுமேய்க்கும் சிறுவர்கள். இக்கட்டடம் கட்டி 3 ஆண்டுகள்தான் ஆகிறது.

# "சைப்ரஸ் துருக்கியர் அழிக்கப்படுவதை நிறுத்தவேண்டும்"

## ஐ. நா. தலைமைக் காரியதரிசிக்கு துருக்கி உதவிஅதிபர் கடிதம்

அங்காரா, மே 15

சைப்பிரஸில் துருக்கியசைப்பிரஸ் மக்களை அழித்தொழிக்கும் கிரேக்க சைப்பிரஸ்காரரின் நடவடிக்கையை உடனடியாக உறுதியான நடவடிக்கை மூலம் நிறுத்திவைக்குமாறு ஐ. நா. தலைமைக் காரியதரிசியை துருக்கி உதவி அதிபர் டாக்டர் குச்சுக் கேட்டுள்ளார்.

500 துருக்கி சைப்பிரஸினர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் 700 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மார்ச் 27-ந் திகதி ஐ. நா. படை சைப்பிரஸுக்கு அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை நல்லபயன் ஏற்படவில்லையென்றும் துருக்கியர்களின் கடைகள், வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதுடன் நிலைமை மோசமாக உள்ளதாகவும் டாக்டர் குச்சுக் தெரிவித்துள்ளார்.

தொண்டர்படையென்றபெயரில் 'குண்டர்படை'யொன்று திரட்டப்பட்டிருப்பதாகவும் ஆர்ச்பிஷப் மக்காரியஸ் பலாத்காரச் செயல்களுக்கு ஊக்கமளிக்கும் முறையில் நடந்து கொள்ளுகிருரென்றும் துருக்கி உதவி அதிபர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## நாயக்கர்கால ஓவியங்கள் அகற்றப்படும்

சென்னை, மே 15

தமிழ் நாட்டில் சோழர்கால ஓவியங்கள் மீது வரையப்பட்ட நாயக்கர் கால ஓவியங்கள் அகற்றப்படுமென்றும் சோழர் கால ஓவியங்களை பேணிப் பாதுகாப்பதே இதன் நோக்கமென்றும் தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதி அறிவித்துள்ளது.

நாயக்கர் கால ஓவியங்கள் அகற்றப்படுவதற்கு முன்னர் புகைப்படங்கள் எடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள கல்வெட்டுக்கள் மீது சுண்ணாம்பு பூசவேண்டுமென சென்னை அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் கேட்டுள்ளது.

## மலையேறினர்!

புதுடில்லி, மே 15

26,700 அடி உயரமான ஸோலு மலைச் சிகரத்தில் மேற்கு ஜெர்மன் மலையேறும் கோஷ்டியினர் ஏறி வெற்றியீட்டியுள்ளனர். ஏப்ரல் 26-ந் திகதி இக்கோஷ்டி மலை உச்சியை அடைந்தது.

## நாகாலாந்து நிர்வாகம்

கொஹிமா, மே 15

நாகாலாந்து நிர்வாக அறிக்கைகள் மகாநாடு நேற்று நடைபெற்றது. மகாநாட்டில் நாகாலாந்து முதன்மந்திரி சிலுஆவோ பேசுகையில் சமாதானப் பணிக் குழுவின் முயற்சி வெற்றியளிக்குமென நம்பிக்கை தெரிவித்தார். பகை நாகர்களுக்கு விடுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அவர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

## பாதுகாப்புசபை கூடவில்லை

நியுயோர்க், மே 16

ஐ. நா. பாதுகாப்புச்சபை நேற்று காஷ்மீர் பிரச்னைபற்றி விவாதிப்பதற்குக் கூடவில்லை ஒருமனதான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்காக பாதுகாப்புசபை அங்கத்தவர்களுடன் சபைத் தலைவர் கலந்தாலோசனை செய்துவருகிருர். இந்திய பாகிஸ்தான் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசினர்.

## இந்தோனேஷியா-சீன ஒப்பந்தம்

ஜாகர்த்தா, மே 15

விஞ்ஞான தொழில் நுட்பத் துறையில் இந்தோனேஷியாவும் சீனவும் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. பாண்டுங் கொள்கையின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## வைரம் களவு

லண்டன், மே 15

64,000 பவுண் பெறுமதியான வைரக் கற்கள் பிரிட்டிஷ் விமானமொன்றிலிருந்து திருட்டுப்போய் விட்டதாகவும் ஒரு வாரத்தில் விமானத்திலிருந்து வைரக்கற்கள் இத்துடன் இரண்டாவது தடவை களவு போயிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## "காஷ்மீர் இணைப்பு இறுதியானது"

— டாங்கே

புதுடில்லி, மே 15

ஐ. நா. கூட்டு பக்தோபஸ்துசபையில் காஷ்மீர் குறித்து விவாதிக்க முடியாதென இந்தியா மறுத்துவிடவேண்டும் என டாங்கே வற்புறுத்தினர்.

பொதுக்கூட்டம் ஒன்றில் இக்கருத்தைத் தெரிவித்த அவர் தொடர்ந்து பேசுகையில்:

காஷ்மீர் இணைப்பு இறுதியானது. மாற்ற முடியாதது என்பதை இந்தியா ஐ. நா.வுக்கு சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவுபடுத்த வேண்டும். காஷ்மீரில் உள்ள ஒரே ஒரு பிரச்னை பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பே தவிர வேறெதுவும் இல்லை. காஷ்மீர்போர் போர்நிறுத்த எல்லைக் கோட்டிலிருந்து ஐ. நா. பார்வையாளர்களை வாபஸ்பெறப்படுத்தல் வேண்டும்.

## பள்ளியில் தீவிபத்து

காவேரிப்பாக்கம், மே 15

இராமாபுரம் ஹரிஜன காலனி அருகேஉள்ள ஆரம்ப பாடசாலையில் சமீபத்திற் பலத்த தீவிபத்தேற்பட்டது. பள்ளியின் கூரை, தளபாடங்கள் அனைத்தும் நாசமாயின.

## மூளையை ஆராய புதிய கருவி

லண்டன், மே 19

மூளையை ஆராய்வதற்கு ஆவியைப் பயன்படுத்தும் வழிவகைகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, சாதாரண, திசுக்களைவிட புண்பட்ட திசுக்கள் கதிர் வீச்சுப் பொருளைத் துரிதமாகக் கிரகிக்கின்றன என்ற உண்மையே இம் முறையில் ஆராய்ச்சி செய்வதற்கு வாய்ப்பளித்துள்ளது. இரத்த ஓட்டத்திற்குள் கதிர் வீச்சுள்ள சின்னஞ்சிறு ஆவிக்குமிழ் செலுத்தப்படுவதே இம் முறையிற் கையாளப்படும் உபாயமாகும். ஏதேனும் புண்ணிருந்தால் அந்த இடத்தில் கதிர்வீச்சு அதிகப்படுவதிலிருந்து அதைத் தெரிந்துகொள்ளுகிருர்கள்.

சதிவழக்கு விசாரணை

# கைது செய்யப்பட்ட போது அதிர்ச்சியுற்றேன்

## ஜோன்புள்ளே தொடர்ந்து சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

"என்னைக் கைதுசெய்தது எனக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. சிறையில் அடைக்கப்படும் வரை நான் ஒரு அறையில் இருந்தேன். இது ஒரு பயங்கர அநுபவம்தான்"

இவ்வாறு நேற்று நடைபெற்ற புரட்சி சதிவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த முன்னாள் ஏ. எஸ். பி. திரு. ஜோன்புள்ளே தெரிவித்தார்.

திரு. ஜோன் புள்ளே திரு. ஏ. எச். சி. டி' சில்வா கியூ. ஸி. யினால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதே மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஜோன்புள்ளே தாம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டதாகவும் 1962ம் வருடம் பெப்ரவரி 6ம் திகதி அலரிமாளிகைக்கு அழைத்துச் செல்லப்படும் வரை 24 மணி நேரத்தில் 22 மணி நேரம் வரை சிறைவைக்கப்பட்டிருந்ததாகவும் விபரித்தார்.

திரு. ஜோன்புள்ளே சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தினல் ஆரம்பத்தில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது 1962-ம் வருடம் ஜனவரி 27-ம் திகதி திரு. சிட்னி டி' சொய்ஸா தம்முடன் இன்ஸ்பெக்டர்களின் உணவு விடுதிச்சாலையில் பேசினர் என்றும் திரு. சொய்ஸாவைத் தாம் சந்திப்பதாக நினைத்திருக்கவில்லையென்றும் கூறினர்.

இந்த சந்திப்புபற்றி தாம் திரு. ஸ்டான்லி சேனநாயக்காவிடம் கூறியதாகவும் திரு. சி. சி. திஸநாயக்கா தமது வீட்டுக்கு வந்தபோது திரு வண்டன் டி றீசன், திரு. திஸநாயகா ஆகிய இருவரும் டெலிபோன் மூலம் முறையே திரு. வாக்கருக்கும், திரு. கிட்டோவுக்கும் அழைப்புகள் விடுத்தனரென்றும் திரு. ஜோன் புள்ளே தெரிவித்தார்.

ஜீ. ஜீ.: அரசாங்கத்துக்கெதிராக நடந்துகொளகிறீர் என்பதை எப்போது உணர்ந்தீர்.

சாட்சி: கடற்படைக் கமாண்டர் அலரிமாளிகைக்குள் சென்றுவிட்டார் என்பதை திரு. சி. சி. திஸநாயகாவுக்கு அறிவித்த போது அப்போது திஸநாயகா "மோசமான சூழ்நிலை அது" எனக் கூறினர்.

கே: அப்போது என்ன நேரம்?

ப: இரவு சுமார் 10-00 மணியிருக்கும்.

# சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றது எவ்விதம்?

## முன்னைநாள் மந்திரி விளக்குகிறர்

கொழும்பு, வெள்ளி

'திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா யு. என். பி. மீது எவ்வளவு தூரம் வெறுப்புக்கொண்டுள்ளார் என்பதுபற்றி நான் அறிவேன். இது காரணமாக மாக்ஸிய வாதிகளை அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்வது தனக்கு மூக்குப் போனலும் எதிரிக்கு சகுனப் பிழையாக இருக்க வேண்டும் என்பது போல் இருக்கும்'

இவ்வாறு முன்னுள் மந்திரியும் பண்டாரநாயகா அரசாங்கத்தில் பிரதம கொறடாவாக இருந்தவருமான திரு. ஜே. சி. டபிள்யு முனசிங்கா குறிப்பிட்டுள்ளார்.

திரு. முனசிங்கா மேலும் தெரிவித்துள்ளதாவது:

காலம் சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா எதிர்க்கட்சித் தலைவராக வந்த சமயத்திலிருந்து யு. என். பி. யைத் தோற்கடிக்க மாக்ஸிய கட்சிகளின் ஆதரவைப் பெறபல முயற்சிகள் எடுக்கப்பட்டன. இந்த முயற்சிக்கு தூதராக நின்றவர் தற்போது நிதிமந்திரியாக இருக்கும் திரு. டி. பி இலங்கரத்தின இந்த முயற்சியில் வெற்றிபெருதபோது சுதந்திரக் கட்சியைக் கலைத்துவிட வேண்டுமென அவர் சிபார்சு செய்தார். காலம் சென்ற திரு. பண்டாரநாயகா இது குறித்து இலங்கரத்தினவை மிகவும் கண்டித்து கட்சியில் அக்கறையில்லாது விட்டால் கட்சியைக் குலைக்காது கட்சியிலிருந்து வெளியேறிவிடுமாறு எச்சரிக்கை செய்தார். இப்பிளவை லங்கா சமசமாஜக் கட்சியுடனும் பாஷா பெரமுனையுடனும் கூட்டுச் சேர்ந்ததாலும் இடதுசாரிக் கட்சிகளுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொண்டதாலுமே சுதந்திரக் கட்சி 1956-ம் வருடத்தில் வெற்றிபெற்றது என முடிவு செய்ததிலிருந்து திருமதி பண்டாரநாயகா தம்மை தாமே தவருன வழியில் செலுத்தத் தொடங்கிவிட்டார்.

சுதந்திரக் கட்சியின் மொழிக்கொள்கை காரணமாகவே இத்தேர்தலில் எம். ஈ. பி வெற்றி பெற்றதே தவிர எந்த வித ஒப்பந்தத்தினலுமல்ல.

காலஞ் சென்ற பிரதமர், கம்யூனிஸத்தையும் சர்வாதிகார ஆட்சியையும் முதலாளித்துவம் லோகாயுதம் போன்று தாம் வெறுப்பதாகத் தெரிவித்திருந்தார். இந்த நாட்டு மக்கள் மீது இவற்றில் எந்த ஒன்றும் திணிக்கப் படுவதை தமது கட்சி எதிர்க்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

1960-ம் வருடம் ஜுலை பொதுத் தேர்தலில் கட்சி 75 ஸ்தானங்களில் சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றதற்குக் காரணம் தேர்தல் ஒப்பந்தமல்ல, தனது வாழ்வை மக்களின் நலன் கருதி தியாகம் செய்த பெரிய தலைவரின் மனைவி மீது மக்கள் கொண்டிருந்த அபிமானமே வெற்றிக்கு காரணம். என்றும் திரு முனசிங்கா குறிப்பிட்டுள்ளார்.

---

### 'பணம் படைத்தவர் ஜே. பி. யாகும் காலம் மாறிவிட்டது'

பண்டாரகம, வெள்ளி

திரு. பி. ஏ. பெரேரா களுத்துறைக்குச் சமாதான நீதிபதியாக நியமிக்கப் பட்டதைப் பாராட்டு முகமாக அத்துலகமவில் நிகழ்ந்த பொதுக் கூட்டம் ஒன்றில் உள்நாட்டு மந்திரி ஏ. பி. ஜயசூரியா பேசும் போது "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் நியமிக்கப்படும் சமாதான நீதவான்கள் சத்தியக்கடதாசிகளுக்கு மாத்திரம் கையெழுத்திடுவதுதான் தங்கள் கடமை என்று கருதாமல் நாட்டில் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு முயலவேண்டும். பணம் படைத்தவரெல்லாம் சமாதான நீதிபதியாக வரலாம் என்றநிலை மாறிவிட்டது" என்று குறிப்பிட்டார்.

பண்டாரகம எம். பி. திரு. கே. டி. டி. பெரேராவும் புதிய சமாதான நீதிபதியைப் பாராட்டிப்பேசினர்.

---

### குண்டு வெடித்தது

வாஷிங்டன், மே. 15

நெவாடாவில நேற்று அமெரிக்கா நிலத்துக்கு அடியில் அணு ஆயுதமொன்றை வெடித்து பரீட்சித்ததாக அறிவிக்கப்படுகிறது.

### பஸ் கண்டக்டர்களுக்கு ஏராளமானேர் விண்ணப்பம்

கொழும்பு, வெள்ளி

பஸ் கண்டக்டர்களுக்கும் சாரதிகளுக்குமான 100 காலி ஸ்தானங்களுக்கு 25,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக இ. போ. ச. அதிகாரிகள் தெரிவித்தனர். பஸ் கண்டக்டர்களுக்கான 500 காலி ஸ்தானங்களுக்கு விண்ணப்பித்தவர்களில் 18,000-க்கு மேற்பட்டவர்கள் எஸ்.எஸ்.ஸி. சித்தியடைந்தவர்கள் எனவும் அவர்களில் பலர் பல பாடங்கள் விசேட சித்தி பெற்றுள்ளனர் எனவும் அதிகாரிகள் கம்பனி காலத்தில் எடுக்கப்பட்ட கல்வியறிவு குறைந்த கண்டக்டர்கள் நடந்துகொள்ளும் விதம் பற்றி பொதுமக்கள் அதிருப்திப் படுவதால் புதிதாக கல்வியறிவுள்ள கண்டக்டர்களை வேலைக்கமர்த்த இ. போ. ச. தீர்மானித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

---

### சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள்

விளிசிட்டி, சனி

விளிசிட்டிச் சனசமூக நிலையத்தின் பதினன்காவது ஆண்டு நிறைவுவிழாச் சென்ற புதன்கிழமை (13-5-64) மாலை நிலையத் துணைத்தலைவர் பண்டிதர் திரு. வே. பொன்னம்பலம் தலைமையில் நிகழ்ந்தது. நிலையத்தின் புதுவருட நிர்வாகிகள் பின் வருவோராவர்:

காப்பாளர்கள்: பண்டிதர் திரு. சி. கதிரிப்பிள்ளை, கிராம சபைத் தலைவர் திரு. த. செல்வரத்தினம். தலைவர்: பிரம்மஸ்ரீ சே. சத்தியோசாதசர்மா உப தலைவர்கள்: பண்டிதர் திரு. வே. பொன்னம்பலம், பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை. செயலாளர்: திரு. க. கோவிந்தசாமி. துணைச்செயலாளர்: திரு. பொ. பழநிநாதன், பொருளாளர்: திரு. செ. சிவசுப்பிரமணியம். கணக்காய்வாளர்: திரு. செ. செல்வரத்தினம். திருவாளர்கள் சி. மயில்வாகனம், கா. சிவகுரு, க. பொன்னையா, க. சங்கரப்பிள்ளை, இ. நமசிவாயம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக் கடமையாற்றுவர்.

---

### எம். பி., மனைவி பயமுறுத்தப்பட்டனர்

இரத்தினபுரி, வெள்ளி

நிவித்திகலை எம். பி. திரு ஸ்டான்லி மொலிகொடையையும் அவரது மனைவியையும் பயமுறுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த அல்பேர்ட் பெரேரா, வின்சன்ட் அப்புகாமி, ஆர். தர்மதாஸா ஆகிய மூவரும் இரத்தினபுரி மாஜிஸ்திரேட் திரு. ஏ. ஆசீர்வாதம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர் விசாரணை ஜூன் 9-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### செலவு செய்ய மான்யங்கள்

கொழும்பு, வெள்ளி

பல இலாகாக்களும் ஒவ்வொரு ஆண்டிலும் தமக்கு ஒதுக்கப்படும் மான்யத்தில் மிகக் குறைந்தளவே செலவு செய்கின்றன.

சுகாதார இலாகா 1963 - 64 நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட 210 லட்சம் ரூபாவில் இதுவரை 42 லட்சம் ரூபாவையே செலவு செய்துள்ளது. இது போலவே 1962 - 63-ம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட 190 லட்சம் ரூபாவில் 90 லட்சம் ரூபாவையே செலவு செய்தது. கட்டிடங்களை கட்டுவது, முன்னர் கட்டியவற்றை தொடர்ந்து கட்டுவது, கருவிகள் வாங்குவது போன்றவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதியில் மிகச் சிறிதளவே பயன்படுத்தப்படுவதை காண முடிகிறது.

இதுபோலவே கல்வி, மராமத்து இலாகாக்களிலும் கட்டடங்கள், கருவிகளுக்காக ஒதுக்கப்படும் நிதி முற்றிலும் பயன்படுத்தப்படுவதில்லை. 1961-62-ம் நிதியாண்டில் மராமத்து இலாகாவில் 520 லட்சம் ரூபாவும், கல்வி இலாகாவில் 310 லட்சம் ரூபாவும் செலவிடப்படாமல் மிகுதியாக இருந்தது.

ஒதுக்கப்படும் தொகை முற்றிலும் உரிய நிதியாண்டில் உபயோகப்படுத்தப்படாமலிருப்பது பற்றி சுகாதார, மராமத்து, கல்வி மந்திரிகளும் அவர்களின் காரியதரிசிகளும் கூடி ஆராய்ந்தனர்.

---

### புதிய வகுப்பு ஆரம்பம்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் திங்கள் முதல் உயர்தரப் பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பை நடாத்த வித்தியா பகுதியினர் அனுமதி அளித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை நேரில் வந்து விபரங்களை அறியுமாறு கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

### பர்மாவில் இந்தியர் வெளியேற்றம்

றங்கூன், மே 15

பர்மாவிலிருந்து வெளியேற விரும்புவோர்களுக்கு அதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்து தருவதற்காகப் பர்மாப் புரட்சி அரசாங்கம் "உயர் கட்ட கமிட்டி போர்ட்டு" என்ற ஸ்தாபனத்தை அமைத்துள்ளது. பிரயாண வசதிகோரி இந்த ஸ்தாபனத்துக்கு விண்ணப்பித்தவர்களிற் பெரும்பாலோர் இந்தியர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சென்னைக்கு டில்லி உதவி

புதுடில்லி, மே 15

சேரி ஒழிப்புத்திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் சென்னை இராஜ்யத்திற்கு கடனாக ரூ. 20-25 லட்சமும் நிதி உதவியாக ரூ. 20-25 லட்சமுமாக மொத்தம் ரூ. 40-50 லட்சம் வழங்கியுள்ளது.

---

### அழைப்பை ஏற்றர்

புதுடில்லி, மே 15

இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு இந்திய அரசாங்கம் விடுத்த அழைப்பை பொலிவியா அதிபர் ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் எப்பொழுது இந்தியாவுக்கு விஜயம் செய்வாரென்பதுபற்றி திகதி நிச்சயிக்கப்படவில்லை.

---

### குரங்கு ஏற்றுமதி

சென்னை, மே 15

இந்தியாவிலிருந்து வைத்திய ஆராய்ச்சிக்காக ஏற்றுமதியர்கும் குரங்குகளை பத்திரமாக அனுப்புவதற்கான விதிகளை இந்திய தரநிர்ணய ஸ்தாபனம் தயாரித்துள்ளது. 1963 ஏப்ரல் முதல் 1964 ஜனவரி வரை ரூ. 29,37,043 பெறுமதியான 66295 குரங்குகளை இந்தியா இதுவரை ஏற்றுமதி செய்துள்ளது.

---

### கப்பல் கடலில் மூழ்கியது

கல்கத்தா, மே 15

8000 டன் நிறையுள்ள பிரிட்டிஷ் சரக்குக் கப்பல் ஹூக்ளி நதியில் மூழ்கியது. கப்பல் மூழ்குவதற்குமுன் மாலுமிகள் 50 பேரும் கரைக்கு வந்துவிட்டார்கள், கப்பலில் 600 டன் சரக்கு இருந்ததென்றும் சரக்கில் பெரும்பகுதி இரும்பு என்றும் கூறப்படுகிறது. கப்பலை மீட்கச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை.

---

### பொற்கொல்லருக்கு புனர் வாழ்வளிக்கதிட்டம்

சென்னை, மே 15

சென்னை ராஜ்யத்திலுள்ள பொற் கொல்லர்களின் சமூக பொருளாதார நிலைமை குறித்து மதிப்பீடு நடத்துமாறு சென்னை அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

பொற்கொல்லர்களுக்கு துரிதமாக புனர்வாழ்வு வசதிகள் செய்து கொடுக்கவே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### சிரமதானம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையின் 18-ம் பிரிவு மாணவர்கள் சிரமதானம் மூலம் கலாசாலை வளவுக்குள் ஒரு கிணறு தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.




S-lon

எஸ் - லொன்
இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக் குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது, அரிப்பேற்படாது, இருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானல் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்.
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

**சனி 16-5-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00;

காலை 6-45 உதயகீதம், 6-55 சைவநற்சிந்தனை. 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 திரை இசை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-10 விலைவாசிகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாரநிகழ்ச்சிகள், 7-00 கதம்ப நிகழ்ச்சி — விஜயலக்ஷ்மி சண்முகம்பிள்ளை. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு — எஸ். வணனியசிங்கம், 9-30 வயலின் — வி. சிவஞானம், 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 17-5-64**

காலை 6-45 காலைக்கதிர், 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்த ஆராதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை.

பகல் 11-30 சிறுவர்மலர், 12-45 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு — சாய்ந்தமருது அக்பர், 5-45 திரைக்குரல்.

இரவு 6-15 ஜலதரங்கம் — சசிலேலா பாலச்சந்திரன், 6-45 பாட்டு — கௌரீஸ்வரி கனகரத்தினம், 7-45 வீணை, 7-30 நாடகம் — 'வீரத்தின் விளைவு' (நடமாடி எழுதியது), 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மாதர் கேட்டவை, 9-45 தேர்ந்த இசை, 10-00 ஒலிப்பதிவுகள்.


**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Daily 3Shows. Sats.&Suns. Four
Elvis Presley
in
IT HAPPPENED
at the
**WORLD'S FAIR**
(Panavision Metro color)


## 'நல்ல முறையில் நாடகத் தயாரிப்பு'

கொழும்பு, வியாழன்

"நாடகங்கள் தயாரிக்கும் பொழுது நாம் பலவிதமான அம்சங்களை நன்ருகக் கவனித்துக்கொள்ளவேண்டும். அத்துடன் சபைக்கு ஏற்றவாறு நாடகங்களை நாம் ஆக்கிக்கொள்ளவும் வேண்டும்" என்று இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசா "நாடகத் தயாரிப்பு" என்ற தலைப்பில் சிவசக்தி கலையரங்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்திய முத்தமிழ்க் கலை விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

சிவசக்தி கலை அரங்கின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிக்குத் திரு. கே. சி. தங்கராசா தலைமை தாங்கினர்.

திரு. கே. எஸ். நடராசா மேலும் குறிப்பிட்டதாவது:-

"நாடகங்கள் தயாரிக்கும் பொழுது அந்த நாடகங்கள் இரண்டு மணி நேரத்திற்கு மேற்பட்டவைகளாக இருக்கக்கூடாது. அதற்கு மேற்பட்டால் சபையினர் நாடகங்கள் நடந்துகொண்டிருக்கும் பொழுதே வெளியேறி விடுவார்கள். இதனால் நடிகர்கள் உற்சாகத்தை இழந்துவிடுவார்கள். மேலும் காட்சிகள் ஐந்து அல்லது ஆறுக்கு மேலாகவும் இருத்தல் கூடாது. ஏன் எனில் தற்பொழுது எங்கள் மேடைவசதிகள் காட்சிகளை மாற்றியமைப்பதற்குபோதாது இதனால் காட்சிகளுக்குள் அநேக நேரம் எடுக்கக்கூடும். ஒலி நாடகத்திற்கு இன்றியமையாததெனினும், நடிகர்கள் ஒலி வசதிக்காக அங்கும் இங்கும் மேடையில் உலாவுதல் உகந்ததல்ல. நாடகத்திற்கு ஏற்றவாறு ஒலி அமைக்கப்பட்டு நடிகர்கள் ஒலியைப் பொருட்படுத்தாது. நடிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் நல்லதொரு சிறந்த நாடகத்தைத் தயாரிக்க முடியும்."

விழாவில் ஜலதரங்கம், தாளவாத்தியக்கச்சேரி, நாடகம் முதலிய இடம்பெற்றன.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பில் மின்சார வெளிச்ச உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் மட்டக்களப்பு உதைபந்தாட்டச்சங்கம்செய்து முடித்துள்ளது. இச்சுற்றுப் போட்டிக்கான இறுதிஏற்பாடுகளைச் செய்யும் பணியில் சங்கச் செயலாளர் திரு. எ. ஆர். ரூகல் ஈடுபட்டுள்ளார்.

19-ந் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகும் இச்சுற்றுப போட்டி நாள் தோறும் இரவு 7-30 மணிக்கு ஆரம்பமாகும். 19-ந் திகதி செவ்வாய்க்கிழமை 7-30 மணி தொடக்கம் 10-30 மணிவரை மூன்று போட்டிகள் நடைபெறும். 20-ந் திகதி புதன்கிழமை இரண்டு போட்டிகளும். 21-ந் திகதி இரவு இறுதிப்போட்டியும் வெள்ளிக்கிண்ண பரிசளிப்பு வைபவமும்நடைபெறும்.

## எவருக்கும் வெற்றியில்லை

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை 'றேஞ்சேஸ்' விளையாட்டுக் கழகத்தினருக்கும் அரியாலை விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவு கோஷ்டியினருக்குமிடையே சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்த உதைபந்தாட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தின்போது இடைவேளைக்குமுன் எந்தக் கோஷ்டியும் கோல் போடவில்லை. இடைவேளைக்குப்பின் இரு தரப்பினரும் மிகத் திறமையாக விளையாடியபோது ஊர்காவற்றுறைக் கோஷ்டி முதலில் ஒருகோல் போட்டது இறுதி நேரத்தின்போது அரியாலைக் கோஷ்டியும் ஒரு கோல் போட்டது.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டக்கழகத்தைச் சேர்ந்த திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## 'விவசாயத்தில் கவனம் செலுத்துக'

கொழும்பு, வெள்ளி

கைத்தொழிலில் மூலதனம் செய்வதைவிட விவசாயத்தில் மூலதனம் செய்வதால் அதிக பேருக்கு வேலை கிடைக்கும் என காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா சந்திரிக்கவேவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அடுத்தவருடம் இலங்கையின் சனத்தொகை 1160 லட்சமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் இது பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்த சனத்தொகையை விட 8,000,000 அதிகமாக உள்ளதாகவும், 396,584 தொன் அரிசியையும், 137,326 தொன் மாவும் இறக்குமதி செய்யப்படவேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

1958-ம் வருடத்திலிருந்து வருடா வருடம் நெல்விளைச்சல் அதிகரித்து வருவதையும் மந்திரி புள்ளிவிபரங்களுடன் எடுத்துக் கூறினர். கைத்தொழிலில் 25,000 ரூபாவை மூலதனம் செய்து ஒருவருக்கு வேலை கொடுக்க முடியுமானல் 13,000 மூலதனத்துடன் விவசாய மூலம் ஒரு குடும்பத்திற்கு வேலை கொடுக்கமுடியுமென்பதையும் அவர் குறிப்பிட்டுக்காட்டினர்.

## தண்ணீர் பஞ்சம்

கொழும்பு, வெள்ளி

கடந்த நாலகு தினங்களாக கொழும்பு தெற்கிலுள்ள களுபோவில்லா ஆஸ்பத்திரியில் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுவிட்டது. தண்ணீர் இல்லாமல் மருந்துகளை கலக்க முடியாது என்று அங்குவேலை செய்யும் மருந்துப்பகுதியிலுள் ளவர்கள் மறுத்துவிட்டார்கள்.

## கொக்கோ செய்கைக்கு அரசாங்க உதவி

கொழும்பு, வெள்ளி

கொக்கோ பயிர்ச் செய்கைக்கான உபமான்யமாக 85 லட்சம் ரூபாவை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. முன்னர் கொக்கோ பயிர் செய்யப்பட்ட நிலங்களில் பயிர் செய்கையை மீண்டும் நடத்தவிரும்புவோருககு ஏக்கருக்கு 850 ரூபா வீதம் அரசாங்கம் நிதி உதவி அளிக்கும்.

## முருகமூர்த்தி கோவில் கொடியேற்றம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் பருளாய் முருகமூர்த்தி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் 15-5-64 வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி தொடர்ந்து பதினௌரு தினங்கள் நடைபெறும். 25-5-64 திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்ததினம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் தீர்த்தமும் நடைபெறும்.

## ஆய்வுக்குழு அமைக்க அனுமதி தருக

கொழும்பு, வெள்ளி

காட்டிலாக்காவின் தொழிற்சங்கம் பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கவலையீனத்தினலும் திறமையின்மையினலும் காணமற் போனவற்றைப பற்றி ஆராயக் குழு ஒன்றை அமைக்க அதிகாரம் தமக்கு வழங்குமாறு கோரியுள்ளது.

## 'வரண்ட பிரதேசத்திலிருந்து சிறந்த நாகரிகம்'

மாகோ, வெள்ளி

வறண்ட பிரதேசத்திலிருந்தே மிக உயர்ந்த நாகரிகம் தோற்றியது. சிறந்த சிற்பிகளும் அங்கேயே தோன்றினர்கள்' என வடமேல் மாகாண உதவி வித்தியாதிபதி திரு ஜி. எச். பி. எக்கநாயக்கா இங்குள்ள விஜயபா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்ரேர் - ஆசிரியர் சங்க கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

திரு. எக்கநாயக்கா மேலும் பேசுகையில் நல்ல மழை சோம்பேறித்தனத்தைத் தோற்றுவிக்கின்றது. இதனல் உழைப்பு தடைப்படுத்தப்படுகின்றன என்ருர்.

மாகோ மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் மற்ற மகாவித்தியாலய மாணவர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல என்றும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.


## வரி விளம்பரம்

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. **கபிரியேல் பெயின் ஓயில்**
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. **கபிரியேல் ஓயின்மென்ற்**
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. **கபிரியேல் ஸ்பெஷல் பாம்**
தடிமன், தலையிடி, சந்துவி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்.
GABRIELS.Chunnakam. 278

### விற்பனைக்கு

பனைச் சந்தையில் பஸ் நிற்குமிடத்திற்கு நேரெதிரில் கண்டி—கொழும்பு ரோட்டில் வியாபாரத்திற்கு மிகவும் உகந்தது ஐந்து லாச்சம் காணி விற்பனைக்குண்டு. கலந்து கொள்ளவும். 2, மெயிட்லண்ட் கிரசெண்ட், கொழும்பு-7. 412

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

### தேவை

எமது கடையின் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்த ஒருவர் தேவை. பிணை ரூ.500. வேதனம் ரூ. 50/-வும் சாப்பாடும். விபரங்கட்கு:- D. A. பிள்ளை, பத்திக்ஸ் ரோட், நெக்கினமேசன், யாழ்ப்பாணம். 418



# அடுத்த திரை விருந்து

**எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி**

மற்றும் பலர் நடித்த

# நானும் ஒரு பெண்

**இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.**

## வெற்றிகரமான 8வது வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **லக்ஷ்மி** (சாவெட்டி)

மற்றும் 8 திரைகளில்



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி

நடித்த

# பெரிய இடத்துப் பெண்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன் — பண்டரிபாய் நடித்த **பராசக்தி**



# மைசூர் சந்தன முகப்பவுடர்

உங்கள் மென்மையான வதனத்தை சூரியவெப்பத்திலிருந்து பாதுகாத்து நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடனும், நறுமணத்துடனும் பொலிவுடனும் விளங்கச்செய்கிறது.

திறம் மைசூர் சந்தனத்தின் சுகந்தம் வியர்வை நாற்றத்தைப் போக்கி, முகப்பருக்களை நீக்கி, வதனத்தை வெண்மையாக்கி பொலிவுறச் செய்யும். அதன் நறுமணத்தை மிகவும் விரும்புவீர்கள்.

குடும்பத்தில் அனைவருக்கும் ஏற்ற ஒரே முகப்பவுடர். முகப்பருக்களினல் கஷ்டப்படுவோர்க்கு பிரத்தியேக அனுகூலம்.

**மற்றும்** திறம் மயில் மார்க் சந்தன வில்லைகள், மயில் மார்க் சுகந்த சந்தனப் பவுடர், உள் யந்திரத்தினல் அரைத்த பச்சைச் சந்தனம் எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளரும் ஏகவிநியோகஸ்தர்களும்:-

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 541.

160, செட்டியார் தெரு,
கொழும்பு - 11

# கூட்டாட்சிக்கு பின்னரே மொழிப்பிரச்னை பரிசீலனை

## என். எம். பெரேராவின் 9 அம்ச திட்டம் பற்றி அரசியல் கருத்துகள்

### பிரதமர் ஸ்ரீமா கொழும்பு திரும்பினார்

கொழும்பு, வியாழன்

கூட்டரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர்தான் மொழிப் பிரச்னை, இந்தியர் பிரச்னை உட்பட, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல பிரச்னைகளும் ஆராயப்படுமென்று அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

கூட்டாட்சி ஏற்பட்ட பின்னரே இப்பிரச்னைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தலாமென்ற கருத்துக்கிணங்கவேதான் டாக்டர் என். எம். பெரேரா சமர்ப்பித்த ஒன்பது அம்சத் திட்டத்தில் இவை பற்றி குறிப்பிடப்படவில்லையென்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. அநேகமாகக் கூட்டாட்சி ஏற்படுவது இப்பொழுது சாத்தியமாகிவிட்டதென்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இடதுசாரி ஐக்கியமுன்னணியின் மத்திய இணைப்பு கமிட்டிக் கூட்டத்தில் டாக்டர் என். எம். பெரேராவின் ஒன்பது அம்சத் திட்டம் பற்றி பரிசீலனைசெய்யப்பட்டது. இந்தத் திட்டத்தில் டாக்டர்கொல்வின் ஆர். டி' சில்வா இரு திருத்தங்களைக் கொண்டுவந்தார் என்றும் மொழியுரிமை, தோட்டத் தொழிலாளர்களுக்கான குடியுரிமை ஆகியவையே இத்திருத்தங்கள் என்றும் அறியப்படுகிறது.

டாக்டர் என். எம். பெரேராவின் ஒன்பது அம்ச திட்டத்தில் மொழிப் பிரச்னை பற்றிக் குறிப்பிடாததற்கு முக்கிய காரணம், இப் பிரச்னை பற்றியும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இதர பிரச்னைகள் குறித்தும் கூட்டாட்சி ஏற்பட்டபின்னர் விரிவான முறையில் பிரதமருடன் பேச்சுகள் நடத்தலாம் என்பதே யாகும் என்றும் கூறப்படுகிறது. தொடர்ச்சியாக பல கூட்டங்களை நடத்திவரும் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் இணைப்பு கமிட்டி, நேற்றிரவு ஒரு உப கமிட்டியை தெரிவு செய்தது. உத்தேச கூட்டரசாங்கம் பற்றிய வேலைத்திட்டம் குறித்து இக் கமிட்டி ஆராயும். இவ் உபகமிட்டி டாக்டர் என். எம். பெரேராவின் 9 அம்சத் திட்டத்துக்கு சில திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறது.

#### முக்கிய பேச்சுக்கள்

கதிர்காமத்துக்குச் சென்றிருந்த பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கொழும்பு வந்துசேர்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இன்று நடைபெறவிருந்த, இடதுசாரித் தலைவர்கள்—பிரதமர் பேச்சுக்கள் சனிக்கிழமையன்றே ஆரம்பிக்கலாமென்று நம்பப்படுகிறது. இன்று பகல் கொழும்பு திரும்பவிருந்த பிரதமர் இன்றிரவே இங்கு வந்து சேர்ந்தார். கூட்டரசாங்கம் சம்பந்தமாக இடதுசாரித் தலைவர்களுடன் பிரதமர் சனிக்கிழமை பேச்சுக்களை ஆரம்பிப்பார்.

நேற்றைய 'ஈழநாடு' தெரிவித்திருந்ததுபோல், கூட்டரச சம்பந்தமான நிச்சயமான முடிவுகள் அடுத்தவாரம் வெளியாகும் என்று நம்பப்படுகிறது.

## இந்துசமய கல்வி விருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

இந்துசமயக் கல்வி விருத்திச் சங்கத்தின் ஆதரவில் மாதந்தோறும் மூன்றுவது ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 'சைவ சித்தாந்தம்' என்னும் பொருள்பற்றி திரு. சு நடேச பிள்ளை சிறப்புச் சொற்பொழிவுகள் செய்யவிருக்கிறார்.

இத் தொடர்பின் முதலாவது சொற்பொழிவு இம் மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. இச் சொற்பொழிவுகளைக் கேட்க விரும்புபவர்கள் முதலாவது சொற்பொழிவில் தங்கள் பெயர்களை மேற்படி சங்கத்திற் பதிவுசெய்துகொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

## 'பஸ் சேவை சீர்கேடு நேர அட்டவணை மாற்றப்படவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா

பஸ் போக்குவரத்துச் சீர்கேட்டை உடனடியாக நிவர்த்திசெய்ய வேண்டுமென்றும் அட்டவணையின்படி ஓடாது பிரயாணிகளுக்கு வசதியற்ற முறையில் நீண்ட இடைவெளிக்குப்பின்னர் ஒன்றன்பின் ஒன்றாக ஓடும் பஸ் சேவையை மாற்றவேண்டுமென்றும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நிலைமை மோசமாகிவிடுமென்றும், தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. சி. எம். எஸ். நாதன், நுணுவில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நேற்று மாலை நடைபெற்ற சங்க பொதுக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. சி. எம். எஸ். நாதன். உப தலைவர்கள்: திருவாளர்கள் அ. பரமனுதர், வி. தில்லைநாதன், காரியதரிசி: திரு. அ. கந்தையா, தனாதிகாரி திரு. இ. குமாரசுவாமி.

---

## அப்போதிக்கரிமார் டாக்டர் ஆகலாம்

கொழும்பு, வெள்ளி

20 வருடச் சேவையைப் பூர்த்தி செய்துள்ள அப்போதிக்கரிமார் தம்மை வைத்தியர்களாகப் பதிவு செய்து கொண்டால் டாக்டர் என்னும் பதத்தைப் பிரயோகிக்கும் உரிமை பெறுவர் என சுகாதார அமைச்சர் பதியுதீன் மாமூத் அரசினர் அப்போதிக்கரிமார் சங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

கொக்குவில் சம்பவம்:

# இருவர் படுகாயம்

## சந்தேக நபர்கள் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவிலில் நேற்று மாலை ஏற்பட்ட தகராறு காரணமாகக் காயமடைந்த கந்தையா ராஜரத்தினம், கந்தையா சுப்பிரமணியம் ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் நிலைமை அபாயகரமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. கையிலே காயமடைந்த வைத்தி என்பவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இத்தகராறு சம்பந்தமாகச் சகோதரர்களான வெள்ளையன் வல்லி, வெள்ளையன் கணேச ஆகியோரைச் சந்தேகத்தின்பேரில் ஆனைக்கோட்டைப் பொலிஸார் கைதுசெய்துள்ளதாகவும், தொடர்ந்து புலன்விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

காயமடைந்தவர்களாகிய கந்தையா ராஜரத்தினம், கந்தையா சுப்பிரமணியம் ஆகியோர் மரணவீட்டிற்குச் சென்றுவிட்டுத் திரும்பும் வழியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்ததாகவும் அறியப்படுகின்றது.

---

## மோசடி வழக்கு

### எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

'நெஸில்' கம்பெனிப் பிரதிநிதியெனக் கூறி, வேறு கொக்கோப் பவுடரை ஏமாற்றி விற்றதாக, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சிங்கராசா ஜோன் சத்தியானந்தம் மீது தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் திரு. அரசவாலடன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் பின் நீதிபதி எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ந் தேதி காரைநகர் மேற்கில் பொன்னம்பலம் கணேசனுக்கு, நெஸில்ஸ் கம்பெனி பிரதிநிதியெனக் கூறி வேறு கொக்கோ பவுடரை ஏமாற்றி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிங்கராசா ஜோன் சத்தியானந்தம் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திரு. பி. கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜரானார். இன்ஸ்பெக்டர் ஜோகோரான் சார்ஜண்ட் திரு. ஈஸ்வரபாதத்தின் அனுசரணையுடன் வழக்கை நடத்தினர்.

---

## பென்ஷன்பகுதி வேலையில் சுறுசுறுப்பு

கொழும்பு, வெள்ளி

பென்ஷன்பகுதியில் தற்பொழுது வேலை மிகவும் சுறுசுறுப்பாகவும் துரிதமாகவும் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது. பென்ஷன் பகுதி அண்மையில் விஸ்தரிக்கப்பட்டு உத்தியோகத்தர்களும் அதிகரிக்கப்பட்டுள்ளார்கள். பாஷை அடிப்படையில் 31-12-63லும் அதற்கு முந்திய திகதிகளில் இளைப்பாறிய உத்தியோகத்தர்களின் 'பைல்'கள் யாவும் பூர்த்தியாகி, கணக்குப் பரிசோதகரின் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதன் காரணத்தினால் பென்ஷன் காரியாலயத்தில் தினமும் கூடும் கூட்டம் முந்திய நாட்களிலும் மிகக் குறைவாக இருக்கின்றது.

---

லண்டன், மே 15

சீனாவின் வடமேற்கு எல்லையில் பொதுமக்கள் வெளியேற்றப்பட்டு துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த இடம் ஒரு ராணுவத்தளமாகக் காட்சியளிப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

## நிறையளவு சீனி

கொழும்பு, வெள்ளி

நாட்டிலே சீனித் தட்டுப்பாடு வருவதற்கு உணவுப் பகுதியினர் விடமாட்டார்களென்றும் நிறையளவு சீனி தற்போது இருப்பதாகவும் உணவுப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

மார்ச் 3-ம் தேதி வந்த 'தியோட்ரா' கப்பலில் 10,000 டன் சீனி இறக்கப்பட்டதென்றும், மார்ச் 11-ம் தேதி வந்த 'கிங்மிங்' கப்பலிலிருந்து 10,000 டன் சீனி இறக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதென்றும் அவர் கூறினர்.

---

## இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகள்

கொழும்பு, வெள்ளி

நாட்டிலுள்ள இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நால்வர் கொண்ட கமிட்டி ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இக்கமிட்டி இன்னும் இரண்டு வாரகாலத்தில் முதல் முதலாக கூடும் என கமிட்டி வட்டாரங்கள் தெரிவித்தன. இக்கமிட்டியில் உள்நாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கொகோபன் விக்கிரமா, சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. வி. பாலசிங்கம், உள்நாட்டு அமைச்சுக் கமிஷனர் திரு. டி. எல். மகதந்திலா, ஆயுர்வேத கமிஷனர் திரு. டபிள்யு. ஜே. பெர்ணாண்டோ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

---

## என்ஜினியரிங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தகுதி பெறுவோர் உயரின விஞ்ஞானப் பகுதிக்கும் விவசாயப்பகுதிக்கும் அனுமதிக்கப்படுவார்கள் என பல்கலைக் கழக உபவேந்தர் திரு நிக்கலஸ் அட்டியகலை தெரிவித்தார்

பல்கலைக்கழக புதுமுக பரீட்சையின் கலைப்பகுதி முடிவுகள் அளவுக்குமிஞ்சி தாமதப்படுத்தப் பட்டுள்ளதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

## சண்முகதாசன் கோஷ்டி விஜயம்

மட்டக்களப்பு, வெள்ளி

இலங்கை கம்யூனிஷ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. என். சண்முகதாசன், திரு. பிரேம்லால் குமாரசிறி, திரு. என். எல். பெரேரா, ஜனப் சாபி ஆகியோர் இம்மாதம் 23-ம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர். மட்டக்களப்பு கம்யூனிஷ்ட் கட்சி (சீன ஆதரவாளர்)யின் சார்பிலும் தொழிற்சங்க சம்மேளன மட்டுநகர் கிளையின் சார்பிலும் இக்கோஷ்டியினருக்கு மட்டக்களப்பு, காத்தான்குடி, வாழைச்சேனை ஆகிய இடங்களில் வரவேற்பு அளிக்க திரு. கே.வி. கிருஸ்ணகுட்டி ஏற்பாடு செய்துள்ளார். 23-ம் திகதி மாலை வாழைச்சேனையிலும், 24-ம் திகதி காலை காத்தான்குடியிலும் மாலை மட்டக்களப்பிலும் கூட்டங்கள் நடைபெறும்.

---

## பதவி உயர்வு கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

பல்கலைக்கழகத்தில் நிர்வாகப் பகுதியில் கடமையாற்றும் சிரேஷ்ட கனிஷ்ட பிரிவிலுள்ள ஊழியர்களுக்கு அவர்களது சேவைக்காலம், தகுதிக்கேற்ப பதவி உயர்வு அளிக்கப்படவேண்டுமென இலங்கைப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

# "அஸ்வான் அணைக்கட்டு உலகின் எட்டாவது அதிசயம்"

—குருஷ்சேவ்

## நாஸர், குருஷ்சேவுக்கு ஸ்ரீமா வாழ்த்து

அஸ்வான், மே 13

நைல் நதியை திருப்பிவிடும் திட்டத்தை இன்று ஆரம்பித்துவைத்து சோவியத் பிரதமர் குருஷ்சேவ் உரை நிகழ்த்துகையில்; அஸ்வான் அணைக்கட்டு உலகத்தின் எட்டாவது அதிசயம் என்று வர்ணித்தார்.

அஸ்வான் அணைக்கட்டின் முதற்கட்டத்தை சோவியத் பிரதமர் இன்று ஆரம்பித்துவைத்தார். மணல்பாறை ஒன்றை அகற்ற வகைசெய்யும் ஒரு பொத்தானை குருஷ்சேவும், அதிபர் நாஸரும் அமுக்கிய தன்மூலம் நைல்நதித் திட்டத்தின் ஒரு கட்டம் செயல்பட ஆரம்பித்தது.

ஐ. அ. கு. அதிபர் நாஸர், உதவி அதிபர் ஆகியோருக்கு சோவியத் யூனியனின் மிக உயர்ந்த பட்டத்தை குருஷ்சேவ் வழங்கினர்.

அஸ்வான் அணைக்கட்டு அங்குரார்ப்பணம் குறித்து இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஐக்கிய அரபுக் குடியரசு அதிபருக்கும், சோவியத் பிரதமர் குருஷ்சேவுக்கும் இன்று வாழ்த்துச்செய்திகளை அனுப்பியுள்ளார்.

அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்தினால், ஐக்கிய அரபுக் குடியரசு மக்களுக்குக் குறிப்பாக அரசாங்கத்தின் சோசலிசக் கொள்கைக்குப் பெரும் வெற்றி கிடைத்துள்ளதென்று ஐ. அ. குடியரசு அதிபருக்குப் பிரதமர் சிறிமா அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மூலப்பொருள் இறக்குமதிக்கு சுங்கவரி இல்லை

ஜெனிவா, மே 15

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடமிருந்து மூலப்பொருட்களுக்கு வசூல் செய்யப்படும் சுங்கவரியை ரத்துச் செய்வதென்ற தீர்மானம் ஜெனிவாவில் நடைபெறும் உலக வர்த்தக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. அடுத்த வருடத்திலிருந்து வரி வசூலிப்பதில்லை என்று கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒப்புக்கொண்டன. இத்தீர்மானத்தை ரஷ்யா, செக்கோசிலவேக்கியா, ஹங்கேரி உட்பட பல நாடுகள் ஆதரித்தன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 16-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.